# லோமி (Lhomi)

வசிப்பிடம்: சுமார் 9,000 லோமி மக்கள் நேபாள், இந்தியா மற்றும் சீனா (திபெத்) ஆகிய மூன்று நாடுகளில் வசிக்கிறார்கள். பெரும்பகுதி நேபாளின் கோஷி (Koshi) மண்டலத்தில் சன்குவா சபா (Sankhuva Sabha) மாவட்டத்தின் ஹெதங்னா (Hedangna) பகுதியின் மேலே அருண் நதியின் அருகே செங்குத்தான மலைகளிலுள்ள ஆறு கிராமங்களில் திபெத்தின் எல்லைவரை(செம்தாங்(Chyamtang) மற்றும் கிமாதான்கா (Kimathanka) கிராமங்கள்வரை) வசிக்கிறார்கள். கடந்த சில வருடங்களாக, சில லோமி ஆண்கள் கூலி மற்றும் கட்டிட வேலைக்காக காத்மண்டுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இந்தியாவில் சுமார் 1,000 லோமி மக்கள் சுற்றுலா பகுதியான டார்ஜிலிங் மாவட்டத்தில் வசிக்கிறார்கள். கி.பி. 1976 ல் நேபாளில் 4000 லோமி மக்கள் இருப்பதாகக் கூறப்பட்டது, ஆனால் கி.பி. 2011 ன் கணக்கெடுப்பில் இந்த எண்ணிக்கைக் குறைந்து 1,614 ஆகியுள்ளது. இந்தியா மற்றும் சீனாவில் இவர்கள் தனி இனமாகக் கருதப்படாததால் இவர்களது எண்ணிக்கைப்பற்றிய புதிய விவரங்கள் ஏதுமில்லை.




அடையாளம்: நேபாளில் இவர்களை ஷெர்பா இனத்தின் ஒரு பகுதியாகக் கருதுகிறார்கள். சீனாவில் 1,500 லோமிக்கள் திபெத்திய குடிகளோடு சேர்க்கப்பட்டுள்ளனர், இந்தியாவில் இவர்களைப் புத்த மதத்தினரோடு இணைத்து போட்யா (Bhotia) இனம் உருவாக்கப்பட்டுள்ளது.

மொழி: இந்த மக்களுடைய சுயபெயர் ஷிங்சபா (Shingsaba) ஆகும். ஒரு மொழியியலாளர் இவ்வாறு குறிப்பிடுகிறார்"ஷிங்சபா அல்லது லோமி மக்கள் இமயமலையைச் சேர்ந்த போதி பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களது மொழி வித்தியாசமானது. இவர்களது மொழியைப்பற்றிப் போதுமான விவரங்கள் இல்லை. நான் கேள்விப்பட்டபடி ஷிங்சபா மொழி திபெத்திய வட்டார மொழி வழக்கிலிருந்து வேறுபட்டது. திபெத்தில் இவர்கள் லோமி (தெற்கத்தியர்கள்) என அறியப்படுகிறார்கள்; மற்றும் நேபாளில் காட் போடே (Kath Bhote(மரக்கட்டை திபெத்தியர்கள்)) மற்றும் லாமா போடே (Lama Bhote) போன்ற பெயர்களிலும் அறியப்படுகிறார்கள்." திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தின், போதி துணைப் பிரிவைச் சேர்ந்த லோமி மொழிக்கு இமயமலைப் பகுதிகளில் பேசப்படும் எந்த மொழியோடும் நெருங்கிய தொடர்பு கிடையாது. நெருங்கிய தொடர்பு (69%) எனக் கூறவேண்டுமானால் பாராகாவுளே (Baragaunle) மற்றும் தொல்பொ (Dolpo) மொழிகளோடே ஆகும்; கூடவே லோபா (Loba) மொழியோடு 68 சதவீதமும் , வாலுங் (Walung) மொழியோடு 66 சதவீதமும், லாசா திபெத்திய மொழி மற்றும் கியிரோங் (Kyerung) மொழிகளோடு 65 சதவீதமும், குதங் (Kutang) மொழியோடு 64 சதவீதமும், ஹெலம்பு ஷெர்பா மொழியோடு 60 சதவீதமும், ஷெர்பா (Sherpa) மொழியோடு 58 சதவீதமும் மற்றும் ஜிரேல் (Jirel) மொழியோடு 57 சதவீதமும் ஒத்துப்போகிறது.

மதம்: தாங்கள் புத்தமதத்தைப் பின்பற்றுவதாக இவர்கள் கூறினாலும் இவர்களது சடங்காச்சாரங்கள் இவர்கள் கலப்படமான புத்தமதத்தைப் பின்பற்றுகிறார்கள் எனக் காட்டுகிறது... இவர்களது சூனியக்காரர்கள் லாமாக்கள் (பூசாரிகள்) என்ற பெயரில் வேலை செய்கிறார்கள். சுத்தமான புத்த மதத்தின்படி மிருகபலி செலுத்துதல் அருவருப்பானதாக இருந்தாலும் இவர்கள் ஆண்டு முழுவதும் அநேக சடங்காச்சாரப் பலிகளைச் செலுத்துகிறார்கள்.

கிறிஸ்துவம்: சமீப சில வருடங்களில் 300 லோமி மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். இவர்கள் இந்நாட்களில் அப்பகுதியிலுள்ள மற்ற இனங்களின் மத்தியில் சுவிசேஷகர்களை அனுப்புகின்றார்கள். உண்மையுள்ள ஊழியர்கள் அநேக ஆண்டுகளாக உழைத்து லோமி மொழியில் வேதாகமத்தை மொழி பெயர்த்துள்ளார்கள். கி.பி. 1976 ல் வேதாகமத்தின் சில பகுதிகள் லோமி மொழியில் அச்சடிக்கப்பட்டன, கி.பி. 1995 ல் முழுப் புதிய ஏற்பாடு வெளிவந்தது – இவ்வளவு குறைந்த எண்ணிக்கையுடைய மக்கள் மொழியில் வேதாகமம் மொழிபெயர்க்கப்படுவது ஓர் அரிதான நிகழ்வாகும். இந்தியாவின் டார்ஜிலிங் பகுதியில் பெருந்தொகையில் கிறிஸ்தவர்கள் இருப்பதால் இங்கு வாழும் பெரும்பாலான லோமிக்கள் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கிறார்கள் இருந்தும் சிலரே இரட்சிக்கப் பட்டுள்ளார்கள். நேபாளிலும் இந்தியாவிலும் லோமி கிறிஸ்தவர்கள் இருந்தாலும்கூட அரசியல் நிலை மற்றும் இறுக்கமான கட்டுப்பாடுள்ள எல்லை காரணமாகத் திபெத்திய லோமிக்கள் மத்தியில் சுவிசேஷத்தைக் கொண்டுசெல்வது கடினமாகவே இருந்துவருகிறது.




**Population:**
8,670 (2000)
10,290 (2010)
12,490 (2020)
**Countries:** Nepal, China, India
**Buddhism:** Tibetan
**Christians:** 300

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Lhoket, Shing Saapa, Kathe Bhote, Kar Bhote, Singsawa, Shingsaba

**மக்கள்தொகை:** 4,000 in Nepal (1976, O Vesalainen and M Vesalainen); 1,000 in China (1992, B Grimes [1985 fi gure]); 1,000 in India (1992, B Grimes [1985 fi gure])

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, மத்திய திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 2 (Leh [Central Ladakhi], Shamma [Lower Ladakhi])

**திபெத்திய புத்தமதம்:** 80%

**கிறிஸ்துவம்:** 3.5%

**வேதாகமம்:**சில பகுதிகள் கி.பி. 1976, புதிய ஏற்பாடு கி.பி. 1995

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷஒலிப்பதிவுகள்:** Lhomi

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : LHM

**கிறிஸ்துவத்தின் நிலை**

